5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) ஊராட்சிகள் (பதவிக்காலத்தை நீட்டித்தல்). திருத்த சட்ட முன்வடிவு. 1979

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

(திரு. க. சுப்பு எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றே பேசியாகி விட்டது, உட்காருங்கள். தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : ஒத்துழைக்கிறோம், அவர்கள் இந்த பில்லை வாபஸ் வாங்கிக்கொள்ளட்டும். 'பில்'லின் மீது பேசக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எல்லாம் பேசத் தெரிந்தவர்கள், ஒத்துழைக்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொண்டேன். பேசவேண்டும் என்றால் பேசுங்கள்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, பலமுறை ஊராட்சி களின் ஆயுட்காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டுக் கொண்டிருக் கிறது. குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சியிலிருந்து தொடங்கி இன்னும் அதை விடுவதாகத் தெரியவில்லை. அப் போது சொன்ன காரணம், வாக்காளர்கள் பட்டியல் தயாராக வில்லை என்பதாகும். இப்போது வாக்காளர்கள் பட்டியல் தயாராகிவிட்டது, ஆனால் மழைக்காலம் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இப்போது மழைக் காலம் வரும், பின்னால் வெயில் காலம் வரும், பின்னால் பனிக்காலம் வரும். இப்படி மாறி மாறி வந்து கொண்டிருக்கும். மழைக்காலம் வரும் என்று அன்றைக்கே தெரியாதா? ஏற்கனவே கால நீட்டிப்பு கேட்கும் போது மழைக்காலம் வரும் என்று தெரியாதா? உண்மை அது வல்ல. இப்படி பதவிக் காலத்தினை நீட்டித்துக்கொண்டு போனால் எப்படி ஊராட்சிகள் நல்லமுறையில் இயங்கமுடியும்? இப்படி நீட்டித்துக் கொண்டு போவது நம் ஆயுளுக்கு குறைவு. ஆகவே இந்த மசோதாவை இங்கே கொண்டுவருவதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

1979 பிப்ரவரி 14]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் கூறியுள்ள காரணம், மழைக்காலம் வருகிறது, வாகனங்களைப் பயன்படுத்த வசதியில்லாமல் இருக்கிறது; வாக்காளர்கள் மழைக்காலத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் தேர்தல்கள் நடத்த வாய்ப்பில்லாமல் இருக்கிறது என்ற காரணங்களைச் சுட்டிக்காட்டியிருப்பதைப் பார்க்கும்போது வியப்பாகயிருக்கிறது. தேர்தல்கள் நடத்துவதற்கு இப்படிப்பட்ட காரணங்களைக் காட்டுவது முறைதானா? நிச்சயமாக, வேறு அரசியல் காரணங்கள் இருந்தால் அவற்றை மறைத்துவிட்டு காரணம் இல்லாமலேயே தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு மசோதாவைக் கொண்டு வந்தால் உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது, நீங்கள் செய்யலாம். ஆகவே, இதைக் கொண்டு வருவதற்கான காரணங்களாக, மழைக்காலம் வந்துவிட்டது, மக்களுக்கு வேளாண்மைத் தொழில் செய்யவேண்டியிருக்கிறது, வாகனங்கள் செல்ல வசதியில்லை என்றெல்லாம் கூறுவது நிச்சயமாக பொருத்தமாகயில்லை. ஆகவே இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறி முகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இந்த மசோதாவை யினையும் முன்பு சொன்ன அடிப்படையில் எதிர்க்கிறேன். ஒன்றியக் குழுக்களில் தனி அதிகாரிகளை நியமித்திருப்பதால் தமிழ்நாட்டில் எல்லாயிடங்களிலும் டி.டி.ஓ., பி.டி.ஓ., யூனியன் என்ஜினியர் என்று மூன்று பேர்கள்தான் நிர்வாகத்தை நடத்துகிறார்கள்—நிர்வாகத்தில் ஊழல், லஞ்சம் பெருகிவிட்டது.